RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 352 | டிசம்பர்.22 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மது விற்று பணம் சம்பாதிக்கிறது திமுக அரசு: சவுமியா அன்புமணி

திருவள்ளூர், டிச.22-

திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவே ற்றாமல் அதிகளவில் மதுபான ங்களை விற்று பணம் சம்பாதித்து வருகிறது என பசுமைத்தாயகம் தலைவர் சவுமியா அன்புமணி குற்றம் சாட்டியுள்ளார்.

'சிங்கப் பெண்ணே எழுந்து வா' என்ற முழக்கத்தோடு தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயணம் என்ற பெயரில் பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இன்று திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருகே ஆர்.கே.பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயண நிகழ்வில் சௌமியா அன்புமணி பேசியதாவது: ஆந்திர எல்லையையொட்டியுள்ள மாவட்டமான திருவள்ளூர் மாவட்டத்தில் அதிகளவில் கஞ்சா புழக்கத்தில் உள்ளது.

இளைஞர்களிடையே உள்ள போதை பழக்கத்தால் பொதட்டூர்பேட்டையில் இன்சூரன்ஸ் பணத்துக்காக இரு மகன்கள் தந்தையை பாம்பு கடிக்கச் செய்து கொன்றுள்ளனர். கும்மிடிப்பூண்டி அருகே ஆரம்பாக்கத்தில் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால், நெசவாளர்கள், விவசாயிகள் அதிகம் வசிக்கும் திருத்தணி பகுதியில், நெசவு பூங்கா அமைக்கப்படும், நறுமணப் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைக்கப்படும் என, திமுக வாக்குறுதி அளித்தது. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மதுபான ங்களை அதிகளவில் விற்று பணம் சம்பாதித்து வருகிறது திமுக அரசு.

திருத்தணி அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக பெயரளவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது. ஆனால், மக்கள் கேட்காமலேயே 108 ஆம்புலன்ஸ் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை கொண்டு வந்தவர் அன்புமணி. ஆகவே, அன்புமணியை தேர்தலில் வெற்றி பெற செய்தால் நிறைய வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துவார்.

பெண்கள் உள்ளாட்சி நிர்வாக பதவிகளுக்கு அதிக அளவில் போட்டியிட்டு வெற்றி பெற்று தங்கள் பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## இடைநிலை ஆசிரியர்கள் கோரிக்கைகளை அரசு உடனே நிறைவேற்ற வேண்டும் பிரேமலதா விஜயகாந்த்

சென்னை, டிச.22-

இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கைகளை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் தனது அறிக்கையில், "தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர்கள் கல்வித் துறையில் மிகப்பெரிய பங்களிப்பை அளித்து வருகின்றனர். இவர்கள் தங்கள் பணிகளுக்கு முறையான ஊதியம் மற்றும் சலுகைகளை எதிர்பார்த்து, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்துள்ளார்கள். இடைநிலை ஆசிரியர்கள் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தாலும், அவர்கள் தங்கள் பணி மற்றும் தகுதிக்கு ஏற்ப ஊதியம் பெறவில்லை.

அவர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது அவர்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது. இது தொழிலாளர் உரிமைகளுக்கு அடிப்படை கொள்கை என்பதால், இந்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

பழைய ஓய்வூதிய திட்டத்தை உடனே மீட்டெடுத்து, பணியில் இருந்தவர்களுக்கு உரிய ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும், ஊதிய முரண்பாடுகளை உடன டியாக சரிசெய்து, அவர்கள் கடமைகளுக்கு ஏற்ற முறையான ஊதிய கணக்கீடு செய்யப்பட்டு வழங்க வேண்டும். இடைநிலை ஆசிரியர்களுக்கான உயர்கல்வி ஊக்க ஊதிய உயர்வு வழங்குவதற்கு முன் இருந்த நடைமுறையை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இடைநிலை ஆசிரியர்களின் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். எனவே திமுக அரசு, அதன் தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையில், இடைநிலை ஆசிரிய ர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். ஆசிரியர்களின் பணி மற்றும் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும்.

நிறுத்தப்பட்ட உயர்கல்வி ஊக்க ஊதிய உயர்வு, பழைய ஓய்வூதிய திட்டம், மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் போன்ற கோரிக்கைகள் உடனடியாக இந்த தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம். காலி இடைநிலை வலியு றுத்தி கேட்டு கொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மாமல்லபுரத்தில் தவெக சார்பில் கிறிஸ்துமஸ் விழாவுக்கு ஏற்பாடு - விஜய் பங்கேற்கிறார்

சென்னை, டிச.22-

மாமல்லபுரத்தில் உள்ள ஓட்டலில் தவெக சார்பில் கிறிஸ்துமஸ் விழா நடத்த ஏற்பாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் கட்சித் தலைவர் விஜய் பங்கேற்க உள்ளார். இந்த விழா நாளை நடைபெறும் என்று கூறப்படுகிறது. கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் காரணமாக, தீபாவளி பண்டிகை கொண்டாட்டங்களை கட்சியினர் தவிர்த்தனர்.

இந்த நிலையில், கிறஸ்துமஸ் விழாவை விமரிசையாக கொண்டாட திட்டமிட்டுள்ளனர். இதில் செங்கோட்டையன், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, அருண்ராஜ் உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர்.

இதற்கிடையே, கூட்டணி பேச்சுவார்த்தை குழு அமைப்பது தொடர்பாக செங்கோட்டையன் உள்ளிட்ட தவெக நிர்வாகிகளுடன் விஜய், சென்னை பட்டினப்பாக்கத்தில் உள்ள தனது வீட்டில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

## "வடகிழக்கில் புதிய அத்தியாயம் தொடக்கம்" அசாமில் உர தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி பிரதமர் பேச்சு!

**கவுஹாத்தி: டிச.22–**

அசாமின் திப்ருகர் மாவட்டத்தில் உள்ள நாம்ரூப்பில் புதிய பிரவுன்ஃபீல்ட் அம்மோனியாயூரியா உரத் திட்டத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். இத்திட்டம் வடகிழக்கு பிராந்தியத்தில் தொழில்துறை மறுமலர்ச்சிக்கு முக்கிய உந்துதலாகவும், அப்பகுதிக்கு ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகவும் இருக்கும் என்று அவர் வர்ணித்தார்.



புதிய பிரவுன்ஃபீல்ட் அம்மோனியாயூரியா உரத் திட்டம் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உரக் கழகம் லிமிடெட் (BVF-CL) நிறுவனத்தின் தற்போதைய வளாகத்திற்குள்ளேயே அமைக்கப்பட உள்ளது. இதற்கு மதிப்பிடப்பட்ட முதலீடு ரூ.10,600 கோடிக்கும் அதிகமாகும். இந்த ஆலை அசாம் மற்றும் அண்டை மாநிலங்களின் உரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும், இறக்குமதி சார்பு நிலையைக் குறைக்கும், வேலைவாய்ப்பை உருவாக்கும், மேலும் பிராந்திய பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமி பூஜை விழாவில் உரையாற்றிய பிரதமர் மோடி, "இன்று அசாம் மற்றும் ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களுக்கும் ஒரு மிகப்பெரிய நாள். நாம்ரூப் மற்றும் திப்ருகர் நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த கனவு இன்று நிறைவேறுகிறது. இந்த முழுப் பகுதியிலும் தொழில்துறை முன்னேற்றத்தின் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கவிருக்கிறது. திப்ருகருக்கு வருவதற்கு முன்பு, கவுஹாத்தியில் விமான நிலையத்தின் புதிய முனையம் திறந்து வைக்கப்பட்டது. அசாம் ஒரு புதிய வளர்ச்சி வேகத்தை அடைந்துள்ளது என்று அனைவரும் கூறுகிறார்கள். நீங்கள் இப்போது அனுபவிப்பது ஒரு ஆரம்பம் மட்டுமே" என்றார்

மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால், இந்தத் திட்டம் பிராந்தியத்தின் உர உற்பத்தித் திறனை மேம்படுத்தும் என்று கூறினார். அவர், "வடகிழக்கு இந்தியாவின் பழமையான உர ஆலையான பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உரக் கழகம் லிமிடெட் (BVFCL), தொடங்கப்பட்டதிலிருந்து இப்பகுதி விவசாயிகளுக்கு சேவை செய்து வருகிறது. அதன் திறனை மேலும் அதிகரிக்க, நாம்ரூப் தளத்தில் நான்காவது ஆலை அமைக்கப்பட உள்ளது.

மத்திய அரசின் ஆதரவுடன் அமைக்கப்படும் இந்த புதிய ஆலை ஐந்து ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்படும். ஆண்டுக்கு 12.5 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும். இந்த ஆலை விரிவாக்கம் நாம்ரூப்பை ஒரு முக்கிய உற்பத்தி மையமாக மாற்றும். இந்த ஆலை வடகிழக்கு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு சேவை செய்வதுடன், மேற்கு வங்கம், பிஹாருக்கு விநியோகம் செய்யவும், பூடான் மற்றும் மியான்மருக்கு ஏற்றுமதி செய்யவும் வழிவகுக்கும்" என்று குறிப்பிட்டார்.

## ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஓபிஎஸ் வலியுறுத்தல்

சென்னை, டிச.22-

ஊரக வளர்ச்சியின் அவசியத்தையும், ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் தனது அறிக்கையில், "தமிழ்நாட்டின் உயிர் நாடியாக விளங்குவது ஊரகப் பகுதிகள் என்று சொன்னால் அது மிகையாகாது. பல்லாயிரக் கணக்கான கிராமங்களை கொண்டுள்ள தமிழ்நாடு, முன்னேற வேண்டுமானால் அங்கே மருத்துவ வசதி, குடிநீர் வசதி, கல்வி வசதி, வேளாண் வசதி போன்றவை ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.

அப்படி செய்தால்தான் கிராமப்புறங்களில் தொழில்கள் அதிகமாக வளர்ந்து, பிழைப்புக்காக மக்கள் நகரங்களை நோக்கிச் செல்லும் நிலை குறையும். ஆனால், இதற்கு முற்றிலும் முரணான நிலை தமிழ்நாட்டில் நிலவு நிலவுகிறது. ஊரகப் பகுதிகளின் வளர்ச்சிக்காக பாடுபடும் ஊழியர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி ஊரக வளர்ச்சித் துறை என்பது ஊரக வீழ்ச்சித் துறையாக மாறிக் கொண்டிருக்கிறது.

கிராமப்புற ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர், தூய்மைக் காவலர், சுகாதார உதவியாளர் உள்ளிட்ட அடிப்படை பணிகளை மேற்கொள்பவர்களுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் முதல் ஐந்தாயிரம் ரூபாய் வரை தொகுப்பூதியம் மட்டுமே வழங்கப்படுவதாகவும், அவர்களுடைய ஊதியத்தை குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்ற கோரிக்கை கடந்த நான்கு ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வந்தாலும் இதை திமுக அரசு கண்டு கொள்ளவில்லை என்றும், ஊரகச் செய லாளர் பதவியில் இருப்பவர்களுக்கு தேர்வு நிலை, சிறப்பு நிலை போன்றவை நிர்ணயிக்கப்படாததன் காரணமாக புதிதாக பணியில் சேர்ந்தவர்களும், பல ஆண்டுகளாக பணிபுரிபவர்களும் ஒரே ஊதியத்தை பெறும் அவல நிலை நீடிப்பதாகவும், காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாததன் காரணமாக ஊரக வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, தங்களது 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சென்னையில் நேற்று பேரணி நடத்தப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களின் கோரிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மீது திமுக அரசு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் அதிகாரிகளிடம் அடுத்தகட்ட போராட்டம் துவங்கும் என்று கூட்டமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதாக திமுக அரசு தொடர்ந்து தெரிவித்து வந்தாலும், அரசு ஊழியர்கள், போக்குவரத்துக் கழக ஊழியர்கள், சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், மின்சார வாரிய ஊழியர்கள், பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் பணியாளர்கள், அரசு மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், இடைநிலை ஆசிரியர்கள், பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், தூய்மைப் பணியாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் அன்றாடம் போராட்டம் நடத்துவதைப் பார்க்கும்போது பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பது தெளிவாகிறது.

மொத்தத்தில், கடந்த 55 மாத கால ஆட்சியில் அனைத்துத் தரப்பு மக்களும் ஆற்றொணாத் துயரத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதுதான் கள யதார்த்தம் திமுக அரசின் இந்த மக்கள் விரோதப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

ஊரக வளர்ச்சியின் அவசியத்தையும், ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகளை அழைத்துப் பேசி அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தின் சார்பில் முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்கும் முதல்வர் தை பூச விழாவில் பங்கேற்பாரா? : வானதி சீனிவாசன்

கோவை, டிச.22-

கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், தைப்பூச விழாவில் பங்கேற்பாரா என பாஜக தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் டிச. 20ஆம் தேதி கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், 'எந்த மதங்கள் சார்ந்தும், எந்த பாகுபாடும் இல்லாமல் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறோம். திருப்பணி செய்கிறோம். இது சிலரின் கண்களை உறுத்துகிறது. தமிழ்நாட்டின் அமைதியை எப்படி சீர்குலைக்கலாம் என்று பலர் யோசிக்கிறார்கள்' என கூறியுள்ளார்.

மதங்களுக்கு இடையே பாகுபாடு பார்ப்பதும், மத உணர்வுகளைத் தூண்டி வாக்கு அறுவடை செய்வதும் திமுக என்பது தான் கடந்த கால வரலாறு. கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்கும் முதல்வர் ஸ்டாலினை பாராட்டுகிறோம். ஆனால், அவர் தீபாவளி, விநாயகர் சதுர்த்தி, தைப்பூசம் போன்ற இந்துக்களின் பண்டிகைகளில் பங்கேற்பதில்லை. குறைந்தபட்சம் இந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து கூட கூறுவதில்லை. இது குறித்து சட்டப்பேரவையில் பேச முயன்றால், சபாநாயகர் அப்பாவு அனுமதிப்பதில்லை. இந்நடவடிக்கை மதங்களுக்கு இடையிலான பாகுபாடு இல்லையா? வரும் பிப்ரவரி 1ம் தேதி தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் முருகப் பெருமானின் தைப்பூசம் வருகிறது. அந்த விழாவில் பங்கேற்க முதல்வர் ஸ்டாலின் தயாரா?

இந்து கோயில்களுக்கு திருப்பணி செய்வது திமுகவோ, திமுக அரசோ அல்ல. இந்துக்களின் காணிக்கையில், நன்கொடையில் தான் திருப்பணிகள் நடக்கின்றன.

திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்ற உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும், அதை செயல்படுத்தாமல் அராஜகத்தில் ஈடுபட்டது திமுக அரசு. தமிழ்நாட்டின் அமைதியை சீர்குலைக்க நினைப்பது திமுக அரசு தான். கிறிஸ்துமஸ் விழாவில் இயேசு கிறிஸ்துவின் அன்பை, அவரது போதனைகளை பேசாமல், மத மோதலை ஏற்படுத்தும் வகையில் முதல்வர் பேசியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மானாமதுரையில் புகழ்பெற்ற மருத்துவர் மரணம் : பொதுமக்கள் வருத்தம்

மானாமதுரை, டிச.22-

உயிரை காப்பாற்றும் மருத்துவரை நோயாளிகள் கடவுளுக்கு நிகராக மட்டுமில்லை கடவுளாகவே பார்க்கிறார்கள். சேவைகளில் சிறந்த சேவை மருத்துவம் என்பார்கள் அப்படி சொன்னால் அது மிகையும் அல்ல. ஒரு உயிரை காப்பாற்றும் வாய்ப்பு கடவு ளுக்கு அடுத்தப்படியாக மருத்துவர்களிடமே உள்ளது. அதனால் தான் உயிரை காப்பாற்றும் மருத்துவரை நோயாளிகள் கடவுளுக்கு நிகராக மட்டுமில்லை கடவுளாகவே பார்க்கிறார்கள்.



இன்றைய காலத்தில் எத்தனை டாக்டர்கள் மருத்துவத்தை வியாபாரமாக பார்க்காமல் சேவையாக செய்கின்றனர் என்று தெரியவில்லை. ஆனால் அப்படி செய்தால் அவர்களுக்கு மக்கள் தரும் அங்கீகாரம் எப்படி இருக்கும் என்பதை இன்றைய தினம் அனைவரும் தெரிந்துக் கொள்வார்கள். மருத்துவத்தை தனது உயிர் நாடியாக நினைத்து குறைந்த கட்டணத்தில் ஏழை நோயாளிகளுக்கு சிகிக்சை பார்த்து வந்த டாக்டர் சிவராஜ் மானாமதுரையில் நீண்ட காலமாக அரசு மருத்துவமனையில் பணியாற்றி ஓய்வு பெற்ற டாக்டர் சிவராஜ் நேற்று விருதுநகர் மாவட்டம் காலை அருப்புக்கோட்டையில் அவரது இல்லத்தில் திடீரென காலமானார். கொரோனா தொற்றுநோய் காலத்திலும் மக்களுக்கு இவர் ஆற்றிய சேவை மகத்தானது. அவரது கிளினிக்கிற்கு யார் சிகிச்சைக்கு போனாலும் ஊர்ல எல்லாரும் என்ன செய்றாங்க, எல்லாரும் நல்லா இருக்காங்களா? விவசாயம் எப்படி இருக்கு அம்மா நலமா அப்பா நலமா என்றெல்லாம் ஒரு உறவினர் போல விசாரித்துக் கொண்டே சிகிச்சை அளிப்பதோடு அவரது கனிவான பேச்சே நோய்களை குணமாக்கிவிடும். இப்படியே இவரால் குணமாக்கப்பட்டு உயிர்வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்.



■ சிவகங்கை சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட , சென்னை அதிமுக தலைமை அலுவலகத்தில் நேற்று சிவகங்கை மாவட்ட அண்ணா தொழிற்சங்கம் மாவட்ட துணைத் தலைவர் மானாமதுரை வாகுடி சேர்ந்த ஜி. பரமசிவம் தனது விருப்ப மனுவினை வழங்கினார்.




■ தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் 49வது பிறந்தநாள் மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிவகங்கை நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி சிவகங்கை மன்னர் அரசு கலைக் கல்லூரியில் கடந்த இரு தினங்களாக நடைபெற்றது. முதலாம் பரிசு தொகை 20,025/ ரூபாயை ராஜா அமுதன் பிரதர்ஸ் அணியினரும், இரண்டாம் 15,025 பரிசுத்தொகையினை கே சி சி அணியினரும், மூன்றாம் பரிசு 10,025 காளையார் கோயில்,பரிசு 10,025 வி எம் ஸ்பாட் அணியினரும் பெற்றனர். வெற்றி பெற்ற வீரர்களுக்கு கோப்பையை சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த் பரிசு வழங்கி பாராட்டினார்

# தாம்பரம் மாநகர திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம்

தாம்பரம், டிச.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக சார்பில் இளந்தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் தலைமையில் பகுதி கழக செயலாளர்கள், மண்டலக்குழு தலைவர்கள் டி.காம ராஜ், எஸ்.இந்திரன் ஆகியோர் வரவேற்புரையில் பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சேகர், இரா.சுரேஷ், ஆ.நடராஜன், மாநகர பொருளாளர் வ.விஜயரங்கன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் பொதுகூட்டத்தில் கழக பொருளாளர், மக்களவை குழுத் தலைவர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தமிழ் கேள்வி ஊடக நிறுவனர், மூத்த ஊடகவியாளர் தி.செந்தில்வேல், கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், தாம்பரம் சட்டமன்ற






தொகுதி பார்வையாளர் பரிதி.இளம்சுருதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தலைமை கழக பேச்சாளரும் மேற்கு பகுதி துணைச் செயலாளர் கி.வேல்மணி, தலைமை கழக பேச்சாளரும் தாம்பரம் மாநகர விளையாட்டு அணியின் அமைப்பா ளருமான எஸ்.ஜி. கருணாகர பாண்டியன் மாநகர அணிகளின் அமைப் பாளர்கள், வட்ட செயலா ளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், மாநகர பகுதி வட்ட கிளை பாக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதியில் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே. சத்தியபிரபு பங்கேற்று அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.





■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இளையான்குடியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளர் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இளையான்குடி திமுக தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் பெண்களுக்கான கபாடி போட்டி நடைபெற்று வருகிறது இந்த நிகழ்ச்சியை காண வந்த முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் பார்வையாளராக வந்த எம்எல்ஏ திடீரென மைதானத்திற்குள் புகுந்து வீராங்கனைகளுடன் கபடி விளையாடினார் இது அங்கிருந்தவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது..







# தமிழ்நாடு அறிவியல் இயக்க தேவகோட்டை கண்ணங்குடி கிளை மாநாடு

தேவகோட்டை, டிச.22-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி அருகிலுள்ள DTC கூட்டரங்கில் தமிழ்நாடு அறிவியல் இயக்க தேவகோட்டை கண்ணங்குடி கிளை மாநாடு சிறப்பாக நடைபெற்றது. தேவகோட்டை கிளைத் தலைவர் சேவியர் தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் எட்வின் முன்னிலை வகித்தார். தேவகோட்டை கிளைச் செயலாளர் முத்துராமசாமி வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டப் பொருளாளர் பிரபு அறிவியல் பாடல் பாடி அறிவியல் இயக்க செயல்பாடுகள் குறித்து அறிமுக உரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களுக்கு விஞ்ஞான துளிர் மற்றும் புத்தகம் நினைவு பரிசாக வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி அறிவியலை அறிவோம் அறிவியலால் இணைவோம் என்ற கருப்பொருளில் அறிவியல் மனப்பான்மையை சிவகங்கை மாவட்டத்தில் கொண்டு சேர்க்கும் பணியை தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிறப்பாக எடுத்துச் செல்கிறது என்றும் மாணவ ர்கள் இடையே அறிவியல் மனப்பான்மையை எடுத்துச் செல்வது நமது கடமை என்றும் சிறப்புரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் எட்வின் தேவகோட்டை மற்றும் கண்ணங்குடி புதிய நிர்வாகிகளை முன்மொழிந்தார். தேவகோட்டை கிளைத் தலைவராக ஜேம்ஸ் ரோச் சேகர் கிளைச் செயலாளராக கார்த்திகேயராஜா கிளைப் பொருளாளராக ஜெயபாலன் துணைத்தலைவராக செல்வம் துணைச் செயலாளராக இராஜசேகரன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கண்ணங்குடி கிளைத் தலைவராக சரவணன் கிளைச் செயலாளராக குருமூர்த்தி கிளைப் பொருளாளராக தமிழ் செல்வன் துணைத் தலைவராக குமரேசன் துணைச் செயலாளராக உமாராணி ஆகியோர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சிவகங்கை மாவட்டத் தலைவர் புரட்சிதம்பி அறிவொளி உறுப்பினர் ராஜேந்திரன் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞ ர்கள் சங்க சட்ட ஆலோசகர் ஜீவா னந்தம் காரைக்குடி கிளைச் செயலாளர் டென்சிங் அருள்ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தேவகோ ட்டை கிளைத் தலைவர் ஜேம்ஸ் ரோச் சேகர் கண்ணங்குடி கிளைத் தலைவர் சரவணன் ஏற்புரை வழங்கினர். கண்ணங்குடி கிளைச் செயலாளர் குருமூர்த்தி நன்றி கூறினார். ஆசிரியர்கள் ஹேமா ஜெயராஜ் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரியில் கருத்தரங்கம் -ஆளுநர் ரவி பங்கேற்பு

கோவை, டிச.22-

கோவை மேட்டுப்பாளையம் சாலை கேஎன்ஜி புதூர் பகுதியில் உள்ள கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியும் தென்னிந்திய ஆய்வு மையமும் இணைந்து நடத்திய சிந்து சரஸ்வதி நாகரிகம் (சிந்துநதி முதல் தாமிரபரணி வரை நம்பிக்கை மற்றும் நாகரிகத்தின் நோக்கும் போக்கும் என்ற பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கத்தின் தொடக்கவிழா கல்லூரி வளாகத்தில் உள்ள மாரப்ப கவுண்டர் ஆறுச்சாமி கலையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ்நாட்டின் மேதகு ஆளுநர் ஆர்.என் பங்கேற்று சிறப்புரை யாற்றினார். அவர்தம் உரையில், "எகிப்திய நாகரிகம் நைல் நதிக்கரையிலும் மெசபடோமியா நாகரிகம் டைக்கிரிஸ் நதிக்கரையிலும் தோன்றியது போல நமது இந்திய நாகரிகமும் ஆற்றங்கரையிலேயே தோன்றியது. இந்திய நாகரிகம் உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் என்று குறிப்பிட்டார். இங்கிலாந்தில் உள்ள எடின்பெரா, கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகங்கள் கணிதம், மருத்துவம், வானியல் உள்ளிட்ட தொன்மையான இந்திய அறிவு மரபைக் கண்டறிந்து, மொழிபெயர்த்து ஆவணப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தின என்று குறிப்பிட்டார்.




மொழி, மண்டலம் என்ற அடிப்படையில் வேறுபட்டாலும் வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான் பாரதநாட்டின் தத்துவம் என்றும் சங்க இலக்கியத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று இந்த ஒற்றுமை உணர்வு பதிவாக்கப்பட்டுள்ளது என்றும் கூறியதுடன் அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் உள்ளிட்ட நூல்களிலிருந்து பல் வேறு சான்றுகளை எடுத்துரைத்தார். சரஸ்வதி நதியைப் பற்றி ரிக் வேதம் குறிப்பிடு கிறது என்றும் இந்த நதி தனித்துவம் வாய்ந்தது என்றும் சரஸ்வதி நதி பற்றிய செய்திகள் புராணமல்ல என்றும் அறிவியல் ரீதியாக சரஸ்வதி நதி இருந்தது உறுதியாகியுள்ளது என்றும் மகாபாரதத்தில் அந்த நதியைக் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டார். இவ்விழாவின் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி வரவேற்புரை யாற்றினார். தென்னிந்திய ஆய்வு மையத்தைச் சார்ந்த தரணி குணசேகரன் கருத்தரங்க நோக்கவுரையாற்றினார். கருத்தரங்க ஆய்வுக் கோவையை மேதகு ஆளுநர் வெளியிட்டார். தொடக்கவிழாவின் நிறைவில் கல்லூரி மேலாண்மைக் குழுவின் பொருளாளர் மருத்துவர் ஓ.என் பரமசிவன் நன்றியுரையாற்றினார். தென்னிந்திய ஆய்வு மையத்தின் இயக்குநர் சந்தீப், கல்லூரி முதல்வர் முனைவர் வே. சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பல்வேறு கல்விநிறுவனங்களில் இருந்து வருகை தந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.

# கோவை மாவட்ட அனைத்து ஆட்டோ ஓட்டுனர்கள் சார்பில் ஆர்ப்பாட்டம்

கோவை, டிச.21-

கோவை மாவட்டம் தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கோவை மாவட்ட அனைத்து ஆட்டோ ஓட்டுனர்கள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் அனைத்து ஆட்டோ தொழிற்சங்க கூட்டு கமிட்டி தலைவர் இரா. செல்வம் தலைமையிலும் செயலாளர் வணங்காமுடி முன்னிலையிலும் நடைபெற்றது.

இதில் சிஐடியு எம்.கே முத்துக்குமார், எல் பி எஃப் செல்வம்,ஏடிபி எம் .ராஜன், ஏஐடியு சி வெங்கடாசலம்,எம்எல்எப் ஷாஜகான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தை குறித்து அனைத்து சங்க கூட்டு கமிட்டி தலைவர் செல்வம் , சி ஐ டி யு முத்துக்குமார் கூறியதாவது கோவை மாவட்டத்தில் 15,000 க்கும் மேற்பட்ட ஆட்டோக்களும், மாநிலம் முழுவதும் மூன்று லட்சம் ஆட்டோக்கள் என இத்தொழிலை நம்பி வாழ்ந்து வருகிறார்கள்.

ஏற்கனவே சேவை தொழிலான ஆட்டோ தொழிலில் ஓலா, உபேர், ராபிட்டோ, போன்ற கார்ப்பரேட் பெருமுதலாளிகளின் ஆதிக்கம், சட்டவிரோத பைக் டாக்ஸி, ஆன்லைன் அபராத கட்டணங்கள், உள்ளிட்டவைகளால் ஆட்டோ தொழில் கடும் நெருக்கடியை சந்தித்து வரக்கூடிய நிலையில், ஒன்றிய அரசின் மோட்டார் வாகன திருத்த சட்டம் 2019 ஐ காரணம் காட்டி, எப்சி கட்டணத்தை 600 ரூபாயிலிருந்து அதிகபட்சம் 9 ஆயிரத்து 60 ரூபாய் வரை உயர்த்தியது என்பது ஆட்டோ தொழிலாளர்களை கடுமையாக பாதித்துள்ளது.



ஏற்கனவே ஆண்டு ஒன்றுக்கு எப்சி செய்ய பெயிண்டிங், டிங்கரிங், அப்போல்சரி, இன்சூரன்ஸ்கட்டணம், உள்ளிட்டவைகளுக்காக பல ஆயிரம் ரூபாய் செலவு செய்யக்கூடிய. நிலையில், மேலும் சுமையாக திசி கட்டணத்தை 15 மடங்கு அதிகரித்து வசூலிப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எனவே கேரள அரசை போல் தமிழக அரசும் மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் அனுமதிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை எடுத்து லட்சக்கணக்கான ஆட்டோ தொழிலாளர்களின் வாழ்வை காக்குமாறு கோவை மாவட்ட அனைத்து ஆட்டோ தொழிற்சங்க கூட்டு கமிட்டியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம், மேலும் மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய மோட்டார் வாகன சட்ட திருத்தம் 2019/32ல் பழைய வாகனங்கள் அப்புறப்படுத்தும் நோக்கில் வாகன தகுதி சான்று கட்டண உயர்வு தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான வாகன உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை பறித்து நடுத்தெருவில் இருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மேலும் ஆன்லைன் அபராதம், ஸ்டிக்கர் கட்டணம் எரிபொருள் விலை உயர்வு, சுங்க கட்டணம் உயர்வு, காப்பீடு கட்டணம் உயர்வு, உதிரி பாகங்கள் கானா விலை உயர்வு, ஆயுட்கால வரி என்ற பெயரில் வாகனங்கள் மீது அதிகப்படியான கட்டணம் வசூலால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளோம். பிற மாநில அரசுகள் மத்திய அரசின் வழிகாட்டுதலை ஏற்காமல் அந்த மாநில ஓட்டுநர்களின் வாழ்வாரத்தையும் தொழிலையும் பாதுகாக்கும் நடைமுறையை தமிழக அரசு பின்பற்றி உடனடியாக தகுதி சான்று கட்டளை உயர்வை ரத்து செய்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களை பாதுகாக்க முன்மர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தில்

200க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் கலந்து கொண்டு கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பழனி பஞ்சாமிர்தத்திற்கு மட்டும் ஏன் இத்தனை சிறப்புகள் உள்ளது தெரியுமா?

பழனி என்றதும் முருகனுக்கு அடுத்தபடியாக அனைவருக்கும் நினைவிற்கு வருவது அங்கு வழங்கப்படும் பஞ்சாமிர்த பிரசாதம் தான். இதன் தனித்துவமான சுவை காரணமாக அனைவரும் விரும்பும் உணவுப் பொருளாக இது உள்ளது. பழனி பஞ்சாமிர்தத்திற்கு அப்படி என்ன சிறப்பு என்று பலரும் அறியாத சில தகவல்களை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

கோயில்களில் இறைவனுக்குப் படைக்கப்படும் நைவேத்தியங்கள் அந்தந்த ஆலயத்தின் ஆகம,வழிபாட்டு மரபுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றன. இவ்வாறு இறை சாந்நித்யம் பெற்ற பிறகு அவை பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. அனைத்து கோவில்களிலும் பிரசாரம் தயாரித்து படைக்கப்படுகிறது என்றாலும், சில கோவில்களின் பிரசாதங்களுக்கு மட்டும் மகத்துவம் அதிகம். இதனாலேயே இவைகள் புகழ்பெற்று விளங்குகின்றன. அவற்றில் திருப்பதி லட்டு, திருப்புல்லாணி பாயசம், மதுரை அழகர் கோயில் சம்பா தோசை ஆகியவற்றை போலவே உலக புகழ்பெற்ற கோவில் பிரசாதங்களில் ஒன்று தான் பழனி பஞ்சாமிர்தம்.

அனைத்து முருகன் கோவில்களிலும் பஞ்சாதமிர்த பிரசாதம் கிடைக்கிறது என்றாலும், பழனி முருகன் கோவிலின் தனிச்சிறப்புகளில் ஒன்றாக இந்த பஞ்சாமிர்த பிரசாதம் கருதப்படுகிறது. இந்தப் பஞ்சாமிர்தத்தை நோய் தீர்க்கும் மருந்து,பிராசாதம் என்று அழைக்கிறார்கள். இதை ஏன் அப்படி சொல்கிறார்கள் என தெரிந்து கொள்ளலாம்.

விளைச்சல் மிகுந்த நிலத்தை குறிக்கும் பழைய தமிழ்ச் சொல்லான "பழனம்" என்பதிலிருந்து "பழம்" "பழனி" என்ற பெயர் உருவானதாகக் கூறப்படுகிறது.புராண கதைளின் படி, மற்றொரு ஆன்மிக விளக்கமாக, முருகப்பெருமானை அவரது தாய் தந்தையர்களான சிவன் ஸ்ரீ பார்வதி "நீயே ஞானப்பழம்" என்று அழைத்ததால் "பழம் நீ" "பழனி" என்று மருவியதாகவும் சொல்லப்படுகிறது.

முருகனின் மூன்றாவது படைவீடு அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், பழனி. இங்குள்ள மூலவர் திருமேனி போகர் சித்தரால் நவபாஷாணம் எனப்படும் ஒன்பது வகையான விஷத்தன்மை கொண்ட மூலிகைச் சேர்மங்களால் உருவாக்கப்பட்டது என்பது பாரம்பரிய சித்த மருத்துவ நம்பிக்கை. அதனால், மூலவர் மீது செய்யப்படும் அபிஷேகப் பொருட்கள் அனைத்தும் மருத்துவ குணம் பெற்றதாக கருதப்படுகின்றன.

பழனி பஞ்சாமிர்தம் ஐந்து முக்கிய இயற்கைப் பொருட்களால் தயாரிக்கப்படுகிறது:

பச்சை மலை வாழைப்பழம்
தேன்
கற்கண்டு
நாட்டு சர்க்கரை
பேரிச்சம் பழம்

ஐந்து அமிர்தம் போன்ற சுவை உடைய பொருட்கள் சேர்வதால் இதற்கு "பஞ்சாமிர்தம்" என்று பெயர் வந்தது.சுவைக்காக நெய், ஏலக்காய், சிறிய அளவில் விருப்பாச்சி வாழைப்பழம் ஆகியவற்றையும் சேர்க்கிறார்கள்.

பழனி மலைப் பகுதியில் உள்ள விருப்பாச்சி என்ற கிராமத்தின் பெயரால் அழைக்கப்படும் இந்த வாழைப்பழம், நீர்ச்சத்து மிகக் குறைந்த, அடர்த்தியான தன்மை, நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும் தன்மை கொண்டது. அதனால் தான் பஞ்சாமிர்தத்திற்க சிறப்பு சுவையும் நீடித்த தன்மையும் கிடைக்கிறது.பஞ்சாமிர்தம் பல நாட்கள் ஆனாலும் சுவை மாறாமலும், கெட்டு போகாமலும் இருப்பதற்கும் இது தான் காரணம்.

மற்றபடி பழனி பஞ்சாமிர்தம் தயாரிக்கும் போது அதில் தண்ணீர், செயற்கை ரசாயனங்கள், பதப்படுத்தும் பொருட்கள் எதுவுமே சேர்க்கப்படுவதில்லை இன்று வரை சேர்க்கப்படுவது கிடையாது. இதுவும் இது நீண்ட நாட்கள் கெட்டு போகாமல் இருப்பதற்கு மற்றொரு காரணமாகும்.

இந்த ஐந்து மூலப் பொருட்களும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். தினமும் 2 ஸ்பூன் பஞ்சாமிர்தம் உட்கொண்டால் இதில் உள்ள இயற்கை ப்ரக்டோஸ், மூளையில் செரோடோனின் (மகிழ்ச்சி ஹார்மோன்) சுரப்பை ஊக்குவிக்கும் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. மனநிம்மதி, உடல் சக்தி, நோய் எதிர்ப்பு திறன் மூன்றையும் ஒரே நேரத்தில் தரும் பிரசாதம் இது. பஞ்சாமிர்தம் முதலில் பெருமளவில் தயாரிக்கப்படுகிறது. அதிலிருந்து ஒரு பகுதி தண்டாயுதபாணி மூலவருக்கு அபிஷேகமாகச் செய்யப்படுகிறது. பின்னர் மீதமுள்ள பஞ்சாமிர்தத்துடன் கலந்து பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

# மார்கழி மாதம் மட்டுமே காட்சி தரும் சுயம்பு மரகத லிங்கம் பற்றி தெரியுமா?

தமிழகத்தில் உள்ள தனித்துவமான கோவில்களில் ஒன்று தான் திருச்செங்கோடு மலைமீது அமைந்திருக்கும் அர்த்தநாரீஸ்வரர் கோவில். சிவபெருமான், பாதி சிவமாகவும், பாதி சக்தியாகவும் ஒரு திருமேனியில் காட்சி தரும் திருத்தலம் என்பதை தாண்டி இக்கோவிலுக்கு பல சிறப்புகள் உள்ளன. அப்படி ஒரு அற்புதமான விஷயம் தான் இங்கு மார்கழியில் மட்டும் தரிசிக்கக் கூடிய சுயம்பு மரகத லிங்கம். இதை பற்றி இங்கு தெரிந்து கொள்ளலாம்.

மார்கழி மாதத்தில் வழிபட வேண்டிய, சென்று தரிசிக்க வேண்டிய திருத்தலங்களில் ஒன்று திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோவில். இக்கோவில் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சியில் திருச்செங்கோடு மலையின் மீதுள்ளது. இங்கு மூலவர் அர்த்தநாரீஸ்வரரும், தாயார் பாகம்பிரியாளும் அருள்பாலித்து வருகிறார்கள்.இறைவன் சிவன் பாதி, சக்தி பாதியாக காட்சி தரும் அற்புத திருத்தலம்.

திருச்செங்கோடு உருவான கதை :

இங்கு மார்கழி மாதம் மட்டும் குறைந்தது 5 மணிக்குள்ளாக கோவிலில் இருக்க வேண்டும். அப்பொழுது பிருங்கி முனிவர் வழிபட்ட மரகத லிங்கம் வைத்து வழிபடப்படுகிறது. மற்ற மாதங்களில் அதற்கு பதிலாக வேறு ஒரு லிங்கம் வைத்து வழிபடுகிறார்கள்.

முன்பு ஒரு காலத்தில் ஆதிஷேசனும் வாயுதேவனும் தங்களில் யார் பலசாலி என அறிய இருவரும் போர் செய்து கொண்டனர். அந்த போரினால் உலகில் பேரழிவுகள் ஏற்பட்டன. இந்த துன்பங்களை கண்ட முனிவர்களும், தேவர்களும் அவர்களிடம் யார் பலசாலி என்பதை அறிய ஒரு வழி கூறி அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே பலசாலி என்றனர். அதன்படி ஆதிஷேசன் தன் பலத்தால் மேருமலை சிகரத்தின் முடியை அழுத்தி கொள்ள வேண்டும். வாயுதேவன் தன் பலத்தால் பிடியை தளர்த்த வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் வாயு தேவனால் பிடியை தளர்த்த முடியவில்லை.

இதனால் கோபம் கொண்ட வாயுதேவன் தன் சக்தியை அடக்கி கொண்டார். இதனால் உயிரினங்கள் அனைத்தும் காற்று இல்லாமல் அவதிப்பட்டன. இந்த பேரழிவை கண்ட முனிவர்களும், தேவர்களும் ஆதிஷேசனிடம் பிடியை தளர்த்த வேண்டியதால் அவர் தன் பிடியை கொஞ்சம் தளர்த்தினார். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொண்ட வாயுதேவன் தன் சக்தியால் அப்பகுதியை வேகமாக மோதி அச்சிகரத்துடன் ஆதிஷேசனின் சிரத்தையும் சேர்த்து பூமியில் வீழ்த்தினார். அது மூன்று செந்நிற பாகங்களாய் சிதறி விழுந்தது. அவற்றிலொன்று திருவண்ணாமலையாகவும், மற்றொன்று இலங்கையாகவும், மற்றொன்று நாகமலையாகவும் (திருச்செங்கோடு) காட்சியளிக்கிறது. இவ்வளவு சிறப்புகள் வாய்ந்த நாகமலையில் பல அற்புதங்கள் உள்ளன.

சுயம்பு மரகத லிங்கத்தின் வரலாறு :

பிருங்கி முனிவர், கயிலாயம் வரும் வேளைகளில் சிவபெருமானை மட்டும் வழிபட்டு விட்டு, அவரது அருகில் இருக்கும் உமாதேவியை வழிபடாமல் விட்டு விடுவார். இருவரும் ஒன்றாக அமர்ந்திருக்கும் நிலையில், சிவனை மட்டும் வணங்கும் வகையில், வண்டு வடிவம் எடுத்து சுற்றி வந்து வழிபடுவார். இதனால் கோபமடைந்த பார்வதி, "முனிவரே சக்தியாகிய என்னை அவமதித்ததால், நீர் சக்தி இழந்து போவீர்" என சாபமிட்டார். இதையறிந்த சிவன், நானும் சக்தியும் ஒன்றுதான். சக்தியில்லையேல் சிவமில்லை எனக்கூறி உமையவளுக்கு தன் இடப்பாகத்தில் இடம் கொடுத்தார்.

பார்வதி தேவி இடப்பாகம் பெறுவதற்கு இந்த மலையில் தான் வந்து தவம் புரிந்து கேதார கவுரி விரதம் இருந்து இடப்பாகம் பெற்றார். இங்கு கேதார கவுரி விரதம், புரட்டாசி வளர்பிறை அஷ்டமி திதியில் ஆரம்பித்து 21 நாள் கடைபிடிக்கப் படுகிறது.அப்படி சிவனை நினைத்து தவம் செய்யும் போது சிவ பெருமான் லிங்க வடிவமாக வந்து காட்சி தந்து மறைந்தார். பின் அந்த லிங்கத்திலேயே பார்வதியும் கலந்தார்.

இந்த லிங்கத்தின் அருமை அறிந்த பிருங்கி முனிவர் மலையில் தனது முன்பு காலால் நடந்தே வந்து லிங்கத்தை தரிசனம் செய்தார்.தனது மூன்றாம் காலை துறந்து இழந்த சக்தியை பெற்றார். பின் அந்த லிங்கத்தை அங்கேயே நிறுவினார்.பின் அந்த லிங்கத்தின் சக்தியை எடுத்து கூறி அதை மார்கழி மாதம் மட்டும் எடுத்து அபிஷேகம் செய்து பின் சூரியன் உதயமாவதற்குள் எடுத்து பேழையில் வைத்து விடவேண்டும் என்று தனது சீடர்களுக்கு கட்டளை யிட்டார். மீதி நேரத்தில் சாதாரணமான லிங்கத்தை வைத்து விடுங்கள் என்றார்.

# இந்திய அணியில் கில், ஜெய்ஸ்வால், ஜிதேஷுக்கு வாய்ப்பு கிடைக்காதது ஏன்? @ டி20 உலகக் கோப்பை



எதிர்வரும் டி20 உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஷுப்மன் கில், யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ஜிதேஷ் சர்மா ஆகியோர் இடம்பெறவில்லை. இவர்கள் அணியில் இடம்பெறாமல் போனதற்கான காரணம் குறித்து விரிவாக பார்ப்போம்.

இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறும் இந்த தொடருக்கான இந்திய அணி சூர்யகுமார் யாதவ் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 15 வீரர்கள் இதில் இடம்பெற்றுள்ளனர். இந்த தொடரில் நடப்பு சாம்பியன் என்ற அடையாளத்துடன் இந்தியா களம் காண்கிறது.

ஷுப்மன் கில்: இந்திய ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணியின் கேப்டன் ஷுப்மன் கில் இதில் இடம்பெறாமல் போனது பெரிய சர்ப்ரைஸாக பலருக்கும் அமைந்தது. டி20 அணியின் துணை கேப்டனாக அவர் விளையாடி வந்தார். சஞ்சு சாம்சனுக்கு பதிலாக அபிஷேக் சர்மாவுடன் இணைந்து அவர் தொடக்க ஆட்டக்காரராக அவர் விளையாடினார். 2024ம் ஆண்டுக்கு பிறகு கடந்த செப்டம்பரில் மீண்டும் டி20 அணியில் அவர் இடம்பெற்றார். அது முதல் 15 இன்னிங்ஸ் ஆடி, 291 ரன்கள் எடுத்துள்ளார். இந்நிலையில், அவர் டி20 உலகக் கோப்பை தொடருக்கான அணியில் இடம்பெறவில்லை. அவர் அணியில் இடம்பெறாத நிலையில் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான சஞ்சு சாம்சன், தொடக்க ஆட்டக்காரராக விளையாடுவார். மற்றொரு விக்கெட் கீப்பராக இஷான் கிஷன் அணியில் இடம்பெற்றுள்ளார். இவர் சஞ்சு சாம்சனுக்கு சரியான மாற்றாக பார்க்கப்படுகிறது. அண்மை காலமாக உள்ளூர் கிரிக்கெட் தொடரில் இஷான் கிஷன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜிதேஷ் சர்மா: இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் தொடக்க ஆட்டக்காரராக இருக்க வேண்டுமென விரும்பிய காரணத்தால் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ஜிதேஷ் சர்மா, டி20 உலகக் கோப்பை அணியில் வாய்ப்பு பெறவில்லை. இவர் பின்வரிசையில் இணைந்து அதிரடியாக ஆடும் திறன் கொண்டவர். அதேநேரத்தில் அணியில் பினிஷராக ரிங்கு சிங் சேர்க்கப்பட்டுள்ளார். ஆல்ரவுண்டர் தேர்வாக வாஷிங்டன் சுந்தர் உள்ளார்.

யஷஸ்வி ஜெய்ஸ்வால்: டாப் ஆர்டரில் சிறப்பாக ஆடும் திறன் கொண்டவர் ஜெய்ஸ்வால். அதில் துளியும் சந்தேகம் இல்லை. இருப்பினும் அபிஷேக் சர்மாவின் வருகை காரணமாக இந்திய டி20 அணியில் ஜெய்ஸ்வாலுக்கான வாய்ப்பு மங்கிவிட்டது. மீண்டும் டாப் ஆர்டரில் ஆடும் திறன் கொண்ட மாற்று வீரராக ஜெய்ஸ்வால் பார்க்கப்படுகிறார்.

இந்திய அணி விவரம்: சூர்யகுமார் யாதவ் (கேப்டன்), அபிஷேக் சர்மா, சஞ்சு சாம்சன் (விக்கெட் கீப்பர்), திலக் வர்மா, ஹர்திக் பாண்டியா, ஷிவம் துபே, அக்சர் படேல் (துணை கேப்டன்), ரிங்கு சிங், ஜஸ்ப்ரீத் பும்ரா, ஹர்ஷித் ராணா, அர்ஷ்தீப் சிங், குல்தீப் யாதவ், வருண் சக்ரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர், இஷான் கிஷன் (விக்கெட் கீப்பர்).

# இலங்கை டி20 அணியின் கேப்டனானார் தசன் ஷனகா



ஆடவருக்கான ஐசிசி டி20 கிரிக்கெட் உலகக் கோப்பை தொடர் வரும் 2026ம் ஆண்டு பிப்ரவரி 7 முதல் மார்ச் 8 வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது.

இந்தத் தொடரில் இலங்கை அணி 'பி' பிரிவில் இடம் பெற்றுள்ளது. இதே பிரிவில் ஆஸ்திரேலியா, அயர்லாந்து, ஜிம்பாப்வே, ஓமன் ஆகிய அணிகளும் உள்ளன. இந்நிலையில் டி20 உலகக் கோப்பை தொடருக்கான 25 பேர் கொண்ட முதற்கட்ட அணியை இலங்கை கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. கேப்டன் பதவியில் இருந்து சரித் அசலங்கா நீக்கப்பட்டு தசன் ஷனகா புதிய கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம்: தசன் ஷனகா (கேப்டன்), பதும் நிஸ்ஸங்கா, குசால் மெண்டிஸ், கமில் மிஷாரா, குசால் பெரேரா, தனஞ்சய டி சில்வா, நிரோஷன் டிக்வெல்லா, ஜனித் லியனகே, சரித் அசலங்கா, கமிந்து மெண்டிஸ், பவன் ரத்நாயக்கே, சஹான் ஆராச்சிகே, வனிந்து ஹசரங்கா, துனித் வெல்லலகே, மிலன் ரத்நாயக்கே, நுவன் துஷாரா, இஷான் மலிங்கா, துஷ்மந்த சமீரா, பிரமோத் மதுஷன், மதீஷா பதிரனா, தில்ஷான் மதுஷங்கா, மஹீஸ் தீக் ஷனா, துஷான் ஹேமந்தா, விஜயகாந்த் வியாஸ்காந்த், ட்ரவீன் மேத்யூ.

# டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணி எப்படி? ஒரு விரைவுப் பார்வை

ஆடவருக்கான ஐசிசி டி20 கிரிக்கெட் உலகக் கோப்பை தொடர் வரும் 2026 ம் ஆண்டு பிப்ரவரி 7 முதல் மார்ச் 8 வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது.

20 அணிகள் கலந்து கொள்ளும் இந்தத் தொடரில் நடப்பு சாம்பியனான இந்திய அணி 'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ளது. இதே பிரிவில் நமீபியா, நெதர்லாந்து, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய அணிகளும் இடம் பெற்றுள்ளன.

இந்திய அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் பிப்ரவரி 7ம் தேதி அமெரிக்காவுடன் மோதுகிறது. இந்த ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணியை நேற்று மும்பையில் தேர்வுக்குழு தலைவர் அஜித் அகர்கர் அறிவித்தார். அப்போது கேப்டன் சூர்யகுமார் யாதவ், பிசிசிஐ செயலாளர் தேவஜித் சைகியா ஆகியோரும் உடன் இருந்தனர்.

துணிச்சல் மிக்க முடிவாக துணை கேப்டனாக செயல்பட்டு வந்த ஷுப்மன் கில் நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடி ரன்கள் குவித்த விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான இஷான் கிஷனுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இறுதிக்கட்ட ஓவர்களில் அதிரடியாக விளையாடக்கூடிய ரிங்கு சிங்கும் அணிக்குள் கொண்டுவரப்பட்டுள்ளார்.

ஒருநாள் போட்டி, டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக சிறப்பாக செயல்பட்டு வந்த ஷுப்மன் கில், சமீபகாலமாக சர்வதேச டி 20 போட்டிகளில் தொடக்க வீரராக உயர்மட்ட செயல் திறனை வெளிப்படுத்தவில்லை.

அதிலும் அவரது ஸ்டிரைக் ரேட் கவலை அளிக்கும் வகையில் இருந்தது. கடந்த சில ஆண்டுகளாகவே இந்திய அணி தொடக்க ஓவர்களில் விரைவாக ரன்களை குவித்து வரும் நிலையில் ஷுப்மன் கில்லின் பேட்டிங் அதற்கு தகுந்தவாறு அமையவில்லை.

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக முடிவடைந்த டி20 தொடரின் முதல் 3 ஆட்டங்களிலும் ஷுப்மன் கில் முறையே 4, 0, 28 ரன்களில் ஆட்டமிழந்தார். அதேவேளையில் சையது முஸ்டாக் அலி டி20 தொடரில் 2 சதங்கள், 2 அரை சதங்களுடன் 517 ரன்கள் குவித்துள்ள இஷான் கிஷன் மீது தேர்வுக்குழுவினரின் பார்வை பட்டுள்ளது.

இஷான் கிஷனுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதால் யஷஸ்வி ஜெய்ஸ்வால் பெயர் பரிசீலிக்கப்படவில்லை. அதே வேளையில் கடந்த சில டி20 தொடர்களில் அணியில் இடம் பெற்றிருந்த விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ஜிதேஷ் சர்மா நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக ரிங்கு சிங் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆல்ரவுண்டர்களாக ஹர்திக் பாண்டியா, ஷிவம் துபே, அக்சர் படேல், வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். பிரதான சுழற்பந்து வீச்சாளர்களாக குல்தீப் யாதவ், வருண் சக்ரவர்த்தி தொடர்கின்றனர். வேகப்பந்து வீச்சில் ஜஸ்பிரீத் பும்ராவுடன் அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அணி விவரம்: சூர்யகுமார் யாதவ் (கேப்டன்), அபிஷேக் சர்மா, சஞ்சு சாம்சன், திலக் வர்மா, ரிங்கு சிங், இஷான் கிஷன், ஹர்திக் பாண்டியா, ஷிவம் துபே, அக்சர் படேல், வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், வருண் சக்ரவர்த்தி, ஜஸ்பிரீத் பும்ரா, அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா.



# மீண்டும் இணையும் 'தி கேர்ள் பிரெண்ட்' கூட்டணி

ராகுல் ரவீந்திரன் இயக்கத்தில் மீண்டும் ராஷ்மிகா மந்தனா நடிக்கவுள்ளது உறுதியாகி இருக்கிறது.

ராகுல் ரவீந்திரன் இயக்கத்தில் ராஷ்மிகா மந்தனா நடிப்பில் வெளியான படம் 'தி கேர்ள் பிரெண்ட்'. இப்படம் விமர்சன ரீதியாக கொண்டாடப்பட்டது. கீதா ஆர்ட்ஸ் நிறுவனம் தயாரிப்பில் வெளியான இப்படம் வசூல் ரீதியாக எதிர்பார்த்த வரவேற்பைப் பெறவில்லை. தற்போது மீண்டும் இக்கூட்டணி இணைந்து பணிபுரியவுள்ளது.

தனது அடுத்த படத்துக்கான கதையினை ராஷ்மிகா மந்தனாவை சந்தித்துக் கூறியிருக்கிறார் ராகுல் ரவீந்திரன். அவருக்கும் கதை மிகவும் பிடித்திருக்கவே, இருவரும் இப்படத்துக்கான தயாரிப்பாளரை தேடி வருகிறார்கள். இதனை பேட்டியொன்றில் உறுதிப்படுத்தி இருக்கிறார் ராகுல் ரவீந்திரன்.

'தி கேர்ள் பிரெண்ட்' படத்தில் ராஷ்மிகாவின் நடிப்புக்கு தேசிய விருது கிடைக்கும் என பலரும் கருத்து தெரிவித்துள்ளனர். முழுக்க பெண்களின் மனநிலையை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட இப்படத்தினை பல்வேறு திரையுலக பிரபலங்களும் பாராட்டியிருந்தார்கள்.

# பேட்டியால் உருவான சர்ச்சை: 'தி ராஜா சாப்' தயாரிப்பாளர் விளக்கம்

தனது பேட்டியால் உருவான சர்ச்சைக்கு, 'தி ராஜா சாப்' தயாரிப்பாளர் விளக்கம் அளித்துள்ளார்.

மாருதி இயக்கத்தில் பிரபாஸ் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'தி ராஜா சாப்'. ஜனவரி 9ம் தேதி வெளியாகவுள்ள இப்படத்தின் விளம்பரப்படுத்தும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதன் உரிமைகள் விற்பனையில் தாமதம் ஏற்பட்டது. இறுதியாக இதன் ஓடிடி உரிமையினை ஹாட்ஸ்டார் நிறுவனம் கைப்பற்றி உள்ளது.

இதனிடையே 'தி ராஜா சாப்' தயாரிப்பாளர் விஸ்வ பிரசாத் அளித்த பேட்டியொன்றில், "'தி ராஜா சாப்' திரைப்படம் திரையரங்க உரிமைகள் அல்லாத இதர உரிமைகள் விற்பனையில் எதிர்பார்த்த தொகை வரவில்லை. அதனால் பிரச்சினையில்லை. தற்போது திரையுலக சந்தை சரிவை சந்தித்து வருகிறது. அதனை ஏற்றுக் கொள்கிறோம்" என்று தெரிவித்தார். இந்தப் பேச்சு பெரும் சர்ச்சையை உருவாக்கியது. இதர நடிகர்களின் ரசிகர்கள் இந்தப் பேச்சை முன்வைத்து இணையத்தில் விவாதிக்கத் தொடங்கினார்கள்.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் விஸ்வ பிரசாத் தனது எக்ஸ் தளத்தில், "எங்களின் மிகப்பெரிய படத்தின் வியாபாரம் குறித்து பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. எங்கள் படத்தின் செலவுகள் அல்லது பண விஷயங்களை பொதுவெளியில் விவாதிப்பதில்லை. இப்படம் வெளியான பிறகு உலகளவில் பாக்ஸ் ஆபிஸ் வசூல் விவரங்களை நாங்களே அதிகாரபூர்வமாக பகிர்வோம்.

சினிமா பல்வேறு காலகட்டங்களை கடந்து சென்று கொண்டிருக்கிறது. இன்று திரையரங்குகள் சாராத சந்தை ஒரு இயல்பான சரிவை சந்தித்து வருகிறது. அதே சமயத்தில், திரையரங்குகள் வசூலில் எந்தப் பாதிப்பும் இல்லை. இந்தக் காலகட்டத்தில் கூட திரையரங்குகள் சாராத வியாபாரத்தில் நல்ல மதிப்பையே பெற்றுக்கிறோம். தற்போது வரும் ஒப்பீடுகள் தேவையற்றவை என கருதுகிறேன்.

'தி ராஜாசாப்' திரையரங்குகளில் ரசிகர்கள் கொண்டாடுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு பிரம்மாண்டமான திகில் கலந்த கற்பனைப் படமாகும். கண்டிப்பாக அப்படம் திரையரங்குகளில் வெற்றி பெறும்" என்று தெரிவித்துள்ளார்.



# சூர்யாவின் 'கருப்பு' வெளியீடு எப்போது?

சூர்யாவின் 'கருப்பு' வெளியீடு எப்போது என்பது பலருடைய கேள்வியாக இருக்கிறது.

சூர்யா நடிப்பில் உருவாகி வரும் படம் 'கருப்பு'. இதன் படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டதா, இல்லையா என்பதை இன்னும் படக்குழு அறிவிக்கவில்லை. இதனிடையே இப்படம் ஜனவரி 23ம் தேதி வெளியாகும் என தகவல்கள் வெளியாகின. ஆனால், இப்படத்தின் ஓடிடி உரிமை இன்னும் கையெழுத்தாகவில்லை. இதனால் வெளியீட்டு தேதியினை முடிவு செய்ய முடியாமல் இருக்கிறது படக்குழு.

இதனிடையே, ஜனவரி 23ம் தேதி வெளியீடு என்றால் இப்போதே விளம்பரப்படுத்தும் பணிகளைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், இன்னும் தொடங்கப்படவில்லை. இதனால் இப்படத்தின் வெளியீடு ஜனவரியில் இருக்காது என்பது தெளிவாகிறது. மார்ச் 19ம் தேதி வெளியிடலாம் என்ற முடிவுக்கு படக்குழு வந்திருக்கிறது. மார்ச் மாதத்திற்குள் அனைத்து பணிகளும் முடிந்து படமும் தயாராகி விடும்.

'கருப்பு' விளம்பரப்படுத்தும் பணிகள் தொடங்க இருப்பதால், வெங்கி அட்லுரி படத்தின் விளம்பரப்படுத்தும் பணிகள் தொடங்காமல் இருக்கிறது. ஆனால், 'கருப்பு' மார்ச் மாத வெளியீடு என்பதால், அதற்கு முன்னதாகவே வெங்கி அட்லுரி படத்தின் விளம்பரப்படுத்தும் பணிகளும் தொடங்கிவிடும் என தெரிகிறது. ஏனென்றால் இப்படம் மே மாதத்தில் வெளியிட வேண்டும் என முடிவு செய்திருக்கிறார்கள். இப்படத்தின் இசை, ஓடிடி, தொலைக்காட்சி என அனைத்து உரிமைகளும் விற்பனையாகிவிட்டது.



## நைட்டிங்கேல் கல்வி குழுமத்தின் சார்பாக முப்பெரும் விழா

கோவை, டிச.22-

கோவை கிணத்துக்கடவு பகுதியில் உள்ள எண்ணம் செவிலியர் மற்றும் பார்மஸி கல்லூரியில் எண்ணம் கலையரங்கம் திறப்பு விழா மாணவ, மாணவிகளுக்கு வெள்ளை அங்கி அணிவித்தல் விழா மற்றும் சமத்துவ கிறிஸ்துமஸ் விழா என முப்பெரும் விழா நைட்டிங்கேல் கல்வி குழுமத்தின் தலைவர் மனோகரன் தலைமையில் மிக பிரம்மாண்டமாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு நைட்டிங்கேல் கல்வி குழுமத்தின் நிர்வாக இயக்குனர்கள் நடராஜன், பிரேமாலதா மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக விடுதலை சிறுத்தைகள் கட்சி நிறுவனத்தலைவர் தொல். திருமாவளவன் எம்பி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும், கோவை எம்பி கணபதி ராஜ்குமார். அருட்தந்தை விக்டர் பிரேம்குமார். சினேகம் அறக்கட்டளை ஆர்இவி கிளிஸ், மலையாள இயக்குனரும், நடிகருமான பிரதீப் ஜோஸ் மற்றும் மலையாள பிக்பாஸ் புகழ் கலாபவன் சரிகா ஆகியோர் மாணவ, மாணவிகள் முன்னிலையில் கேக் வெட்டி சமத்துவ கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது.

முன்னதாக சிறப்பு விருந்தினர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் பேண்ட் வாத்தியங்கள் கிராமிய நடனம் சிலம்பாட்டம் ஒயிலாட்டம் கரகாட்டம் என உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

விழாவில் நிர்வாக குழு உறுப்பினர்கள் ராஜீவ், சஞ்சய்மணி. சந்தியா ராஜீவ், மீனா சஞ்சய்மணி,மற்றும் கல்லூரி முதல்வர்கள் பொன்னம்மாள், இந்துலதா,சோபியா, மும்தாஜ், அன்னம், ராஜன் நேதாஜி மற்றும் துணை முதல்வர்கள் திலகவதி. துர்கா தேவி. முகில்சிங், மற்றும் பேராசிரியர்கள். மாணவ, மாணவிகள்,பெற்றோர்கள் என மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.





## தமிழ்நாடு அறிவியல் இயக்க அறிவொளி குடும்ப பேரவைக் கூட்டம்

காரைக்குடி, டிச.22-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நேஷனல் கேட்டரிங் கல்லூரியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட இணைச் செயலாளர் ராஜு தலைமை உள்ள ரையாற்றினார். அறிவொளி இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியன் நோக்கவுரையில் சிவகங்கை மாவட்டத்தில் அறிவொளி இயக்கத்தின் மிகப்பெரிய பங்களிப்பைப் பற்றி உரையாற்றினார். மாணவர் மற்றும் சமுதாயம் சார்ந்து அறிவியல் இயக்கம் மேற்கொண்டு வரும் செயல்பாடுகள் குறித்து மாவட்டப் பொருளாளர் பிரபு விளக்கிப் பேசினார். அறிவியல் இயக்கத்தினுடைய உறுப்பினர் சேர்க்கை, மார்ச் 8 சர்வதேச மகளிர் தின மாநாடு, அறிவியல் பிரச்சார கலைப்பயணம், சீரான இடைவெளியில் கிளை கூட்டம் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அறிவொளி அறிவியல் இயக்க தலைவராக கிருஷ்ணவேணி செயலாளராக ராஜு பொருளாளராக மாலா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியன், அறிவொளி ராஜேந்திரன், சமம் ஒருங்கிணைப்பாளர்கள் மாலா, அறிவொளி முன்னோடிகள் கிருஷ்ணவேணி, மாணிக்கவள்ளி, சரஸ்வதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



## டிச 29ல் சேலத்தில் சிறப்பு செயற்குழு, பொதுக்குழு கூட்டம்: ராமதாஸ் அழைப்பு

சென்னை, டிச.22-

புத்தாண்டு மாநில சிறப்பு செயற்குழு கூட்டமும், மாநில சிறப்பு பொதுக்குழு கூட்டமும் வருகின்ற டிச 29ம் தேதி சேலத்தில் நடைபெறும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது அறிக்கையில், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் 2025க்கு விடை கொடுப்போம், 2026 ஐ வரவேற்போம். புத்தாண்டு மாநில சிறப்பு செயற்குழு கூட்டமும் மாநில சிறப்பு பொதுக்குழு கூட்டமும் வருகின்ற 29.12.2025 திங்கட்கிழமை சேலம் 5 ரோடு ரத்தினவேல் ஜெயக்குமார் திருமண அரங்கில் நடைபெற உள்ளது.

புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சியில் பா.ம.க, வ.ச, ச.மு.ச உள்ளிட்ட அனைத்து அமைப்புகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், மாநகரப் பகுதி நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அவசியம் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்சி வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்தும் 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்தும் ஆலோசிக்கப்படும். மாநில செயற்குழு கூட்டம் 29.12.2025 காலை 10.00 முதல் 11.30 மணி வரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மாநில பொதுக்குழு கூட்டம் 11.40 மணி முதல் நடைபெறும். இதனையே அழைப்பாக ஏற்று பங்கேற்க அழைக்கின்றேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## காரமடை ரோட்டரி கிளப் உதவியுடன் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மீண்டும் ரயில்வே மேம்பால சுரங்கப்பாதை திறப்பு

கோவை, டிச.22-

கோவை மாவட்டம் காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமான ரயில்வே மேம்பாலம் கீழ் உள்ள சுரங்க பாதையில் மழை நீர் தேங்கி இருந்ததால் பொதுமக்கள் பல மாதங்களாக பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வந்தது. இதனை காரமடை ரோட்டரி கிளப் மற்றும் மேட்டுப்பாளையம் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் மூலமாக அவர்கள் உதவியுடன் மழை நீர் தேங்குவதை தடுக்க மோட்டாரில் தானியங்கி மிதவை வால்வு பொருத்தப்பட்டு செயல்படும் விதமாக செய்து மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்பட்டது. இந்நிகழ்வில் நகர் மன்ற தலைவர் உஷா வெங்கடேஷ், நகராட்சி ஆணையர் மதுமதி, காரமடை ரோட்டரி கிளப் தலைவர் குமணன், நிர்வாகிகள் தினகரன், தியாகராஜன், சேகர், வார்டு கவுன்சிலர்கள் குருபிரசாத், சித்ரா எபினேசர் என மேலும் பலர் கலந்து கொண்டனர்

## சென்னையில் கிரியேட்டிங் ஸ்மைல்ஸ் சார்பில் தூய கபிரியேல் மேல்நிலைப் பள்ளியில் 500க்கு மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்

சென்னை, டிச.22-

சென்னையில் இந்த ஆண்டு கிறிஸ்மஸ் பகிர்வு விழாவானது 20/12/25 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு தூய கபிரியேல் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்த விழாவில் 500க்கும் மேற்பட்ட ஏழை, எளிய, குடிசை வாழ் மக்களுக்கு பாய், பெட்சீட், டவல், உணவு, கேக் வழங்கி எங்களது மகிழ்ச்சியை அவர்களோடு பகிர்ந்து கொண்டோம் அதேபோல புதிய முயற்சியாக இந்த ஆண்டு 28 நபர்களுக்கு வாழ்வாதாரத்திற்கான பொருள்கள் வழங்கியுள்ளோம்: ஒன்பது நபர்களுக்கு இட்லி பாத்திரம், ஏழு நபர்களுக்கு டீ கேன், 8 நபர்களுக்கு தையல் இயந்திரம், இரண்டு நபர்களுக்கு அயன் பாக்ஸ், மேலும் இரண்டு நபர்களுக்கு வெஜிடபிள் கார்ட் வழங்கி அவர்களது வாழ்வாரத்தை மேம்படுத்த முயற்சி செய்தோம்.

இந்த விழாவில் சென்னை வடக்கு மண்டல காவல் இணை ஆணையர் மனோகர், கபிரியேல் பள்ளி தாளாளர் அருட்பணி ஜோ ஆண்ட்ரூ, கபிரியேல் பள்ளி தலைமையாசிரியர் அருட்பணி இருதயராஜ் மற்றும் கிரியேட்டிங் ஸ்மைல்ஸ் நிறுவனர் ஜாண் விக்டர், கிரியேட்டிங் ஸ்மைல்ஸ் உறுப்பினர்கள், கபிரியேல் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பசித்தோருக்கு உணவளியுங்கள் தேவையில்லை இருப்பவருக்கு உதவுங்கள் என்ற தாரக மந்திரத்தோடு தொடங்கப்பட்ட குழுமம் தான் கிரியேட்டிங் ஸ்மைல்ஸ். ஒரு சிறிய கடுகு விதையா ஊன்றப்பட்ட கிரியேட்டிங் ஸ்மைல்ஸ் என்ற குழுமம் முளைத்து கடவுளின் அற்புதமான கருணையால், ஆசீர்வாதத்தால் சிறிய செடியாக வளர்ந்து இன்று 118 உறுப்பினர்களைக் கொண்டு தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியா மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் உறுப்பினர் இந்த குழுவில் இருக்கிறார்கள் என்பதை பார்க்கும்போது நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஐந்தாண்டுகள் கிரியேட்டிங் ஸ்மையில் பயணத்தில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி இருக்கிறோம். சாலையோரங்களில் தெருக்களில், காப்பகங்களில் முதியோர் இல்லங்களில், அனாதை இல்லங்களில், இறக்கும் தருவாயில் இருக்கும் முதியவர்கள், மனவளர்ச்சி குற்றியவர்கள் இல்லங்கள்,

தொழு நோயாளர்கள் ஆக தேவையில் இருக்கும் எல்லா தரப்பு மக்களுக்கும் கிரியேட்டிங் ஸ்மைல்ஸ் உதவிக்கரம் நீட்டி வருகிறதது ஐந்தாண்டுகள் கிரியேட்டிங் ஸ்மையில் பயணத்தில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி இருக்கிறோம் என்று குறிப்பிடத்தக்கது

# இளையான்குடி திமுக தெற்கு ஒன்றிய சார்பில் மாநில அளவிலான மாபெரும் மகளிர் கபாடிப் போட்டி

### அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், தமிழரசி எம் எல் ஏ, முன்னாள் எம்எல்ஏ மாரியப்பன் கென்னடி, சேங்கை மாறன் பங்கேற்பு

சிவகங்கை, டிச.22-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் மகளிர் கபாடிப் போட்டி நடைபெற்றது...

இளையான்குடி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆறு. செல்வராசன் தலைமையில் நடைபெற்ற இந்த மாபெரும் போட்டியை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா.தனசேகரன் வரவேற்புரையாற்றிட மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் மாவட்ட மேனாள் கவுன்சிலர் நாகனி பா. செந்தில்குமார், துணை அமைப்பா ளர்களான மணலூர் கே. எம். பெ ஹற்கோ, முகமது மஹாதீர், சேதுபதி ராஜா, பரணிகிட்டு, எஸ். எம். மதிவாணன், கிங் கார்த்திக், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்களான பரத்தவயல் தனபால், கீரனூர் ராஜா, அரியாண்டிபுரம் சந்திரசேகர் , அய்யம்பட்டி கார்த்திக், பூலாங்குடி வினோத் , முத்தூர் பரமேஸ்வரன் , கருஞ்சுத்தி ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்...



இந்த மாபெரும் மகளிர் கபாடிப் போட்டியை தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர், சிவகங்கை மாவட்ட செயலாளர் கேஆர். பெரியகருப்பன், தொகுதி சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் ஆ. தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைத்தனர்...

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் சேர்மன் த. சேங்கை மாறன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சுப. மதியரசன் , சேர்மன் எஸ். மாரியப்பன் கென்னடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் முகமது, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் த. உதயகுமார் , மாவட்ட நிர்வாகிகளான எம்ஏஎஸ்இ. நாஸர் , ஒன்றிய செயலாளர்கள் வெங்கட்ராமன் , தமிழ்மாறன் மாவட்ட நிர்வாகிகள் அண்டக்குடி முருகானந்தம், சையது கான் மீனவரணி பாச்சட்டி சேகர் , அயலக அணி ராஜகுரு, யாஸின், புலியூர் மருது, தலைமைக்கழக பேச்சாளர், நெட்டூர் அய்யாச்சாமி, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்... இந்த நிகழ்ச்சியில் இளையான்குடி தெற்கு ஒன்றியக்கழக நிர்வாகிகளான அவைத் தலைவர் கணேசன் , துணைச்செயலாளர்களான நாகசுந்தரம் , அந்தோணியம்மாள் கஸ்பார், கருணாகரன், பொருளாளர் சித்திரவேல், மாவட்ட பிரதிநிதிகள் ரவிச்சந்திரன், சேவியர் , தயாளன் ஆகியோரும் கலந்து கொண்டனர்...

ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகளான சாலை சாத்தையா, ரெட் சங்கர், ஜெகநாதன் , தமிழ்வாணன், மகளிரணி மலையரசி , நல்லகனி , தனமணிகண்டன் , கிருஷ்ணமூர்த்தி , தவசுராஜன், கோவிந்தராஜ், சேவியர் சேகர் , கபில் மனோஜ், பூபாளன் , பரமசிவம் , ஃபிரான்சிஸ் ஜெரால்டு, லியோ டேணியல் கவின், தனபால் , கண்ணன் தேவா, ஐடி விங் ஆரோன் கிங் , திலகர் , போஸ், குணசேகரன் , நடராஜன், கண்ணுச்சாமி, இராமநாதன் தவமணி, மைக்கேல் ராஜ் , பழனிவேல், தங்கச்சாமி, ஜி. போஸ், மைக்கேல், வி.போஸ் , சங்கரலிங்கம், பால்கரசு , இராமச்சந்திரன் பீட்டர், ஜான் லாரன்ஸ் , ஆறுமுகம் , கஸ்பார், முத்துச்சாமி , கணபதி , நாகேஷ்வரன் , சண்முகராஜா , பாலு , பிச்சை உள்ளிட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...

நிகழ்ச்சியின் இறுதியில் சாலைகிராமம் திமுக செயலாளர் நைனா முகமது நன்றி கூறினார்...

முன்னதாக இளையான்குடி தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ் நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் , முன்னாள் அமைச்சர் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் ஆகியோருக்கு மேளதாளம் முழங்கிட சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது...



## ஃபெவிகால் சாம்பியன் கிளப் சார்பாக உழைப்பு தான தினம் நிகழ்ச்சி நடைபெற்றது

பல்லாவரம், டிச.22-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் மறைமலை அடிகள் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 19/12/2025 அன்று ஃபெவிகால் சாம்பியன் கிளப் சார்பாக உழைப்பு தான தினம் நடைபெற்றது. இதில் 25 க்கும் மேற்பட்ட தச்சர்கள் கலந்து கொண்டு பள்ளியில் மராமத்து பணிகளையும், உள் கட்டமைப்பு வசதிகளையும் இலவசமாக மேம்படுத்தி கொடுத்தார்கள். ஏற்கனவே கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த உழைப்பு தான நிகழ்வை நமது பள்ளியில் நடத்தியுள்ள தச்சர்கள் மூன்றாவது ஆண்டாக நமது பள்ளியில் மீண்டும் தங்களுடைய உழைப்பை தானமாக கொடுத்தார்கள். இதனை நம்முடைய பள்ளியின் முன்னாள் மாணவரும் பெவிகால் நிறுவனத்தின் மேலாளருமான பாலாஜி அவர்களும் உதவி மேலாளர் சிவமணி அவர்களும் ஒருங்கி ணைத்துக் கொடுத்தார்கள். இந்நிகழ்வின் இறுதியில் தங்களுடைய உழைப்பை இலவசமாக கொடுத்த தச்சர்களுக்கும் அதனை ஏற்பாடு செய்து கொடுத்த பெவிகால் நிறுவன அதிகாரிகளுக்கும் பள்ளியின் சார்பாக நினைவு பரிசுகள் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களால் வழங்கப்பட்டது. இதற்கு தேவையான உதவிகளை செய்து கொடுத்த பள்ளியின் முன்னாள் மாணவர் மணிகண்டன் அவர்களுக்கும் அதனை ஏற்பாடு செய்த செந்தில்குமார் அவர்களுக்கும் பள்ளியின் சார்பாக நன்றி தெரிவிக்கப்படுகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161